திரும்பப் பெறப்படுகின்றன.

"உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,675,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.361,40,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20–3–2020), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

151. மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

152. மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர்

பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

153. "நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

154. "பொதுப் பணித் (கட்டடங்கள்) துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

155. "நீர்வள ஆதாரத் துறையின் மூன்றாண்டு சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

156. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

157. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS